# ஆதியாகம புஸ்தகத்திலிருந்து வெளிப்பாடுகள்

3

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# வேதாகமத்தின்படி நம்முடைய தேசப்பிதா யார்?



தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணி, அவனுடைய பெயரை ஆபிராம் என்பதிலிருந்து ஆபிரகாம் என்று மாற்றியிருந்தார். அவர் அவனை தேசங்களுக்கு ஒரு தகப்பனாக ஆக்கப் போவதாக இருந்தார். அந்த வரிசையில், அவன் ஜெர்மனியின் பிதாவாக இருக்கிறான். அவன் அமெரிக்காவின் பிதாவாகவும், சுவீடனின் பிதாவாகவும் இருக்கிறான், எல்லாவிடங்களிலும் உள்ள தேசங்களின் பிதாவாகவும் அவன் இருக்கிறான்.

*செய்தி:* **யேகோவா-யீரே**, ஆகஸ்டு 17, 1955 பத்தி எண் 13

தேவன் ஆபிரகாமை அழைத்து, அவர் அவனை நிபந்தனையற்ற முறையில் இரட்சிக்கப் போவதாக அவனிடம் கூறினார்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **இஸ்ரவேலும் சபையும், பாகம் 1**, மார்ச் 25, 1953, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

75. நாம் 8வது வசனத்திற்கு வருவோம், தேவன் ஆபிரகாமையும் அவனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியையும் எவ்வாறு இரட்சிக்கப் போகிறார் என்று அவர் இங்கே அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணுகிறார். இப்பொழுது, அவர் நிபந்தனையற்ற உடன்படிக்கை செய்தார். அவன்-அவன் ஆபிரகாமாக இருந்த காரணத்தினால், அவர் அதைச் செய்தது சரியாக இருக்கவில்லை. அவர், "இப்பொழுது, ஆபிரகாமே, நீ இதைச் செய்தால், நீ அதைச் செய்தால்" என்று கூறவில்லை. அவர், "ஆபிரகாமே, நான் ஏற்கனவே அதைச் செய்து விட்டேன். நீ செய்ய வேண்டியது எதுவுமில்லை. நான் அதைச் செய்து விட்டேன்,

நானே அதைச் செய்து விட்டேன்!” என்றார். ஆமென். ஓ, என்னே, நான் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கும் போது! தேவன் தாமே அதைச் செய்தார், அது நிபந்தனையற்றதாக இருந்தது. தேவனுடைய உடன்படிக்கை நிபந் தனையற்றது!

76. நீங்கள், “நல்லது, சகோதரனே, நான் மாமிசம் புசிப்பதை நிறுத்தி விட்டேன். நான் இதைச் செய்யவில்லை. நான்...” என்று கூறலாம். சகோதரனே, அதற்கு இதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது. நீங்கள் மாமிசம் புசிக்கிறீர்களா என்றோ, மாமிசம் புசிக்க வில்லையா என்றோ, ஓய்வு நாட்களையோ அல்லது அமாவாசைகளையோ (new moons) ஆசரிக்கிறீர்களா என்றோ, ஞாயிற்றுக் கிழமை யில் ஞாயிறுப் பள்ளிக்குப் போகிறீர்களா என்றோ, இது என்னவாக இருக்கிறது என்றோ அல்ல. நீங்கள் நிபந்தனையற்ற விதமாக இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள்.

77. அப்படியானால் நீங்கள், “சகோதரன் பிரன்ஹாமே, தேவனுக்கு மகிமை, நான் இரட்சிக்கப்பட்டு விட்டதால், நான் விரும்பு

கிறதை செய்யலாமே” என்று கூறலாம். ஆம், ஐயா. சகோதரனே, நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டால், உலகத்தைக்குறித்த எந்த வாஞ்சையும் உங்களுக்கு இராது. உங்களுடைய முழு இருதயமும் அதன்பேரில் தான் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும், உங்களால் அதில் இருந்து தூர விலகி இருக்க முடியாது. ஆனால் அங்கே ஒரு பலமான இழுப்பு இருக்கும் காலம் வரையில், அங்கே இன்னும் ஏதோ தவறுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

78. இப்பொழுது, தெரிந்து கொள்ளுதல், தேவன் ஆபிரகாமை அழைத்து, அவர் அவனை நிபந்தனையற்ற முறையில் இரட்சிக்கப் போவதாக அவனிடம் கூறினார்.

★★★★★

# ஆபிரகாம் ஒரு காரியத்தையும் செய்ய வேண்டியதாயிருக்கவில்லை



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2**

402 கவனியுங்கள். தேவன் ஆபிரகாமுக்கு நிபந்தனையற்ற ஒரு வாக்குத்தத்தை உண்டுபண்ணினார். இப்பொழுது காத்திருங்கள், **ஆபிரகாம் ஒரு காரியத்தையும் செய்ய வேண்டியதாயிருக்கவில்லை**. தேவன், "**நான் அதை ஏற்கெனவே செய்துவிட்டேன்**" என்றார்.

403 தேவன் ஆதாமுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை பண்ணி, "ஆதாமே, நீ இதைத் தொடாமலிருந்தால், நீ என்றென்றைக்கும் ஜீவிப்பாய், ஆனால் நீ அதைப் புசிக்கும் நாளிலே, அந்த நாளிலே நீ சாவாய்" என்றார்.

**ஆதியாகமம் 2:17**



404 ஆதாம், "எப்படியும் நான் இவை எல்லாவற்றையுங் குறித்து வியப்புறுகிறேன்" என்றான். அவன் சென்று அதைப் புசித்து சேதப்படுத்தினான்.

405 தேவன் ஒவ்வொரு முறையும், ஒரு மனிதன் தன்னுடைய உடன்படிக்கையை தேவனோடு செய்யும்போது அல்லது தேவன் ஒரு மனிதனோடு செய்யும்போது, மனிதன் தன்னுடைய பாகத்தை முறித்துப் போடுகிறான். ஆகையால் தேவன் ஏதோ ஒரு காரியத்தை செய்ய வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் மனிதன் என்னவாயிருந்தான் என்பதை அவர் கண்டார். அவர்கள் முன்னியமிக்கப்பட்டிருந்தனர், அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தனர். **எனவே தேவன் ஏதோ ஒரு காரியத்தை செய்ய**

வேண்டியதாயிருந்தது. ஆகையால் தேவன் இறங்கி வந்து, தம்முடைய உடன்படிக் கையை ஆபிரகாமோடு நிபந்தனையற்ற தாய் பண்ணினார். அது நிபந்தனையற்ற தாயில்லாமலிருந்தால், ஆபிரகாம் நீண்ட காலத்திற்கு முன்பே இழக்கப்பட்டிருந் திருப்பான்.

★★★★★

# உங்களுடைய அறிகுறிகளை நோக்கிப் பார்க்க வேண்டாம்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

## (GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

64. இப்பொழுது, அந்தவிதமாகத்தான் ஆபிரகாம் செய்து கொண்டிருந்தான். அவன் சரியாக மாறாதவையோடு தரித்திருந்தான். ஜனங்கள், "இங்கே மேலே நம்மோடு தங்கியிருக்கிற அந்த வயதான மனிதனை உங்களுக்குத் தெரியுமா என்று சொல்லுங்கள். அவன் ஏறக்குறைய அரை பைத்தியமாக இருக்கிறான். ஏன், அவனுடைய

மனைவி ஒரு வயதான பெலவீனமான ஸ்திரீ, அவனுக்கு எவ்வளவு வயதிருக்கும் என்று பாருங்கள், அநேகமாக அந்த நரைத்த மீசையும் முடியும் அவனுடைய இடுப்பு வரை தொங்கிக் கொண்டிருக்கிறது, அப்படியிருக்க அவர்கள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறான் என்று அவன் கூறுகிறான். அப்படிப்பட்ட காரியத்தை நீங்கள் எப்பொழுதாவது கேட்டதுண்டா? ஏன், அந்த வயதான மனிதன் பைத்தியக்ககாரன்!" என்று கூறினாலும் அது காரியமில்லை.

65. ஆனால் அவன் தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்தான். ஒவ்வொரு மனிதனும்... இங்கே அது உள்ளது, இப்பொழுது நீங்கள் அதைக்

குறித்துக் கொள்ளலாம்! இவ்வுலகத்தில் எப்பொழுதுவது மிக அதிகமாக எண்ணப்பட்ட ஒவ்வொரு மனிதனும், அவர்கள் தங்களுடைய திடமான விசுவாசத்தின் பேரில் தனியாக நிற்க வேண்டியிருந்த போதிலும், தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்த மனிதர்களாக இருந்தனர். இந்த தேசத்தினுடைய மகத்தான மனிதர்களாகிய ஜார்ஜ் வாஷிங்டன், வேலி ஃபார்க், ஆபிரகாம் லிங்கன் ஆகியவர்களைக் கவனியுங்கள்; எல்லா மனிதருமே தேவனை நம்பியிருந்த மனிதர்கள் தான். ஆம்.

66. இப்பொழுது, நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். நாம் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தால், ஆபிரகாம் விசுவாசித்ததைப் போன்று

நாமும் விசுவாசிக்க வேண்டியுள்ளது. இப்பொழுது, கடந்த இரவில், தேவன் உடன்படிக்கையை
உறுதிப்படுத்தினபிறகு, அவர் அவனுக்குத் தரிசனமான இடத்தில் நாம் அவனை விட்டு வந்தோம். இப்பொழுது ஆபிரகாமுக்கு வயதாகி விட்டது, மிகவும் வயதாகி விட்டது: அவர் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணின பிறகு ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்கள் ஆகி விட்டன, ஆபிரகாமோ சிறிதளவும் பலவீனமாயிருக்கவில்லை.

ஆபிரகாமுடைய சந்ததி என்று நம்மை நாமே அழைத்துக் கொள்ளுகிற நம்மில் சிலருக்கு இருபத்தைந்து நிமிடங்கள் (கூட) பற்றிக் கொண்டிருக்க முடியவில்லை, இருப்பினும், "நாங்கள்

ஆபிரகாமின் சந்ததியார்; சபை புத்தகத்தில் எங்களுடைய பெயர் உண்டு” என்று கூறுகின்றனர். ஆனால் அது உங்களை ஆபிரகாமின் சந்ததியாராக ஆக்கி விடுவதில்லை.

67. நீங்கள் கிறிஸ்துவுக்குள் மரிக்கும் போது, நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாராய் இருக்கிறீர்கள். எல்லா முரண்பாடுகளும் சிக்னல் தடங்கல்களும் முடிந்து விட்டன. உங்களுடைய நோக்கங்கள் ஒன்றாகவும், உங்களுடைய இருதயம் ஒன்றாகவும் இருக்கின்றன, நீங்கள் கிறிஸ்துவோடு ஒன்றாக இருக்கிறீர்கள். ஆமென். அவர் கூறினது தான் முதன்மையானது, மற்றவை முட்டாள்தனமானவை. அவ்வளவு

தான். நீங்கள் அதற்காக அவருடைய வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள்.

68. இப்பொழுது, அங்கே ஒரு வயதான மனிதன்... சர்வவல்லமையுள்ள தேவனுடைய நாமத்தில் தேவன் அவனை சந்தித்தார். நாம் அவனைக் கடந்த இரவில், ஆதியாகமம் 17ம் அதிகாரத்தில் விட்டு வந்தோம்... "சர்வவல்லமையுள்ள தேவன்" என்ற எபிரெய வார்த்தையானது *எல்ஷடாய்* என்று கண்டுகொண்டோம், அதற்கு, "மார்பு" அல்லது "ஸ்திரீயினுடைய மார்பகம்" என்று அர்த்தம். தேவன் ஆபிரகாமுக்கு மார்பகமுடைய தேவனாக, மார்புடைய தேவனாக தோன்றினார். அவர், "ஆபிரகாமே, நீ வயது சென்றவனாக இருக்கிறாய், உனக்கு நூறு வயது ஆகிறது,

சாராளுக்கு ஏறத்தாழ நூறு வயது - தொண்ணூறு வயதாகிறது. இருந்த போதிலும் நீ அதற்காக என்னுடைய வார்த்தையை எடுத்திருக்கிறாய், நீ பலவீனனாய் இருக்கிறாய், உன்னுடைய சரீரமானது போய் விட்டது" என்றார்.

அவன் தன் சரீரம் எவ்வளவு அதிகமாக அவ்வளவு செத்துப் போனதை இப்பொழுது எண்ணாதிருந்தான் என்று வேதாகமம் கூறுகிறது.

69. ஓ, அது எனக்குப் பிடிக்கும்! அவன் அதை எண்ணக்கூட இல்லை. என்னே! சக்கர நாற்காலிகளைக் குறித்து எண்ண வேண்டாம், எதையுமே எண்ண வேண்டாம் தேவன் சொன்னதையே எண்ணிப்பாருங்கள். தேவன் சொன்னதைத் தவிர வேறு

எதையும் சிந்திக்கக்கூட வேண்டாம். “அவன் தன் சரீரம் செத்துப் போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவனுக்கு துதி செலுத்தி, வல்லவனானான்.”

70. அது இந்த வருடத்தில் சம்பவிக்கவில்லையெனில், அது அடுத்த வருடத்தில் சம்பவிக்கும். அது அடுத்த வருடத்தில் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாக இருக்கப் போகிறது, ஏனெனில் அது ஒரு வருடம் வித்தியாசமாய் இருக்கும். அவன் ஒரு வருடம் பலவீனமாயிருந்தான், ஒரு வருடம் கடந்து விடும். ஆனால்

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை காத்துக் கொள்வார் என்று அவன் அறிந்திருந்தான். ஆமென்! எனக்கு அது பிடிக்கும். அவருடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்வார்... அவர் தேவனாக இருக்க வேண்டுமானால், அவர் அதைச் செய்தாக வேண்டும். ஆபிரகாம் தொடர்ந்து தேவனைத் துதித்துக் கொண்டிருந்தான். "சாராளே, நீ இப்பொழுது எவ்வாறு உணருகிறாய்? தேவன் வாக்குத்தத்தம் செய்தது முதற்கொண்டு, 25 வருடங்கள் ஆகிவிட்டன."

"ஆபிரகாமே, எந்த வித்தியாசமும் இல்லை."

“தேவனுக்கு மகிமை, நாம் அதை எப்படியும் கொண்டிருக்கப் போகிறேன்.” ஆமென். சரி.

“குழந்தையானது துளிகூடப் பிசகாமல் கூறப்பட்ட பிரகாரமாகவே பிறக்கப் போகிறது. எல்லா நல்லமாதிரியான துணிமணிகளையும் (Birdseye), அலங்கார ஊசிகளையும் (pins), மற்றும் யாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு இளைப்பாறிக் கொண்டிரு; நாம் அதைக் கொண்டிருக்கப் போகிறோம்.”

“ஆபிரகாமே, என்ன சொல்லுகிறீர்?”

“தேவன் அவ்வாறு கூறினார்!”

71. அது அதைத் தீர்த்து வைக்கிறது, “தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்.” ஓ, அது எனக்குப் பிடிக்கும்.

சகோதரனே, அது பிசாசு தன்னுடைய வாலை அதன் கால்களுக்கு இடையில் வைத்தவாறு தப்பி ஓடச் செய்யும். “தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்!” அங்கே தான் இயேசு காண்பித்தார்... கிறிஸ்து தம்மிடத்தில் எல்லா குணாதிசயங்களையும் கொண்டிருந்தார், பிதாவானவர் குமாரனுக்குள் இருந்தார். பிதாவானவர் குமாரனுக்குள் இருந்து, உலகத்திற்கு தம்மைத் தாமே ஒப்புரவாக்கினார்... சரியாகச் சொன்னால், உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார். அவர் சாத்தானைச் சந்தித்த போது, தம்முடைய எந்த வல்லமையையும் ஒருபோதும் உபயோகிக்கவில்லை. கிறிஸ்தவர்களிலேயே பலவீனமானவனும் சாத்தானைத்

தோற்கடிக்க முடியும் என்பதை அவர் நிரூபித்தார். சாத்தான் அவரிடம் வந்த போது, "இப்பொழுது, நீர் தேவனுடைய குமாரனானால், நீர் அவ்வாறு இருந்தால், நீர் அற்புதம் நடப்பிக்கும் மகத்தான ஒருவராய் இருக்கிறீர். நீர் அவ்வாறு இருந்தால், நீர் இங்கே எனக்காக ஒரு அற்புதத்தை நடப்பிக்க நான் விரும்புகிறேன், இந்தக் கல்லுகளை அப்பங்களாக்கி, புசியும். இப்பொழுது, நீர் பசியாயிருக்கிறீர்..." என்றான்.

72. இப்பொழுது கவனியுங்கள், இயேசு தம்முடைய வல்லமையை உபயோகிக்கவில்லை, ஆனால் அவர் அதைச் செய்யவில்லை; அவர் வார்த்தையை உபயோகித்தார். அவர், "மனுஷன் அப்பத்தினாலே

மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" என்றார்.

அவர் மூன்று தடவையும் சாத்தானுக்கு எதிர்த்து நின்று மூன்று தடவையும் அவனைத் தோற்கடித்தார், "மூன்று" என்பது சாட்சியின் உறுதிப்படுத்துதலாயுள்ளது. ஆமென்!

73. அவர் தேவனுடைய வார்த்தையைக் கொண்டே சாத்தானை அவனுடைய சொந்த நிலத்தில் தோற்கடித்தார். இன்றிரவு இங்கேயுள்ள பெலவீனமான கிறிஸ்தவனும் எங்கும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதோடு எந்த நிலைமையின் கீழும் சாத்தானைத் தோற்கடிக்க முடியும். சரி. வெறுமனே

அதை விசுவாசியுங்கள். தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்.

“உங்களுக்கு எப்படித் தெரியும்?”

“தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்.”

“என்ன...”

“அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்.”

74. அறிக்கை என்பது என்ன? அறிக்கை செய்தல் என்பது “சொல்லப்பட்டதையே திரும்பச் சொல்லுதல்” என்பதாகும். அதுதான் அறிக்கை செய்தல் என்பதாகும். அறிக்கை செய்தல் என்பது சொல்லப்பட்டதையே திரும்ப திரும்ப சொல்லுவதாகும், அவர் சொன்னதையே திரும்பத் திரும்பச்

சொல்லுவதாகும். அவர் சொன்னதையே சொல்லுதல், உங்களுடைய உணர்ச்சி கூறுவதை சொல்ல வேண்டாம், உங்களுடைய அண்டை வீட்டார் கூறுவதை சொல்ல வேண்டாம். தேவன் கூறினதையே சொல். அதை அறிக்கை பண்ணி, அதையே விசுவாசி.

75. உங்களுடைய அறிகுறிகளை நோக்கிப் பார்க்க வேண்டாம்; அறிகுறிகள் என்பது சத்துருவுடைய மோசமான காரியமாகும்... தேவன் அதற்கு விரோதமாக சண்டையிட வேண்டியுள்ளது. அறிகுறிகள். ஒவ்வொருவரும், "நல்லது, எனக்காக ஜெபிக்கப்பட்டது, ஆனால் என்னுடைய கரமானது

சுகமடையவில்லை" என்று கூறுகிறார்கள்.

76. அது அவ்விதமாக ஒருபோதும் இருக்காது. ஒருபோதும் இருக்காது. நீங்கள் உங்களுடைய கரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய கரத்தை நோக்கிப் பார்க்க வேண்டாம், தேவன் சொன்னதையே நோக்கிப் பாருங்கள். ஆபிரகாம், "இப்பொழுது, சாராளே..." என்று கூறினால் என்னவாக இருக்கும். முதலாவது மாதம். இப்பொழுது, அவளுக்கு ஏறக்குறைய பதினேழு, பதினெட்டு வயதாயிருந்தது முதற்கொண்டு அவன் அவளோடு வருடக்கணக்காக வாழ்ந்து வந்திருக்கிறான், இப்பொழுது இங்கே அவளுக்கு 65 வயதாகி விட்டது,

ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு கடந்து போய் அநேக வருடங்கள் ஆகி விட்டன, பாருங்கள். அவள் பிள்ளைகளைக் கொண்டிருக்கப் போவதாயிருந்தால், அப்போதே அதைக் கொண்டிருந்திருப்பாள். அவர்கள் இருவருமே மலடாய் இருந்தார்கள். அவன், "நல்லது, அவள் எவ்வாறு குழந்தையைக் கொண்டிருக்க முடியும்..." என்று கூறியிருந்தால், அவன் அவ்வாறு கூறியிருந்தால், எப்படியிருக்கும்? ஏன், முதலாவது மாதம் கடந்து போயிற்று, "சாராளே, நீ எவ்வாறு உணருகிறாய்?" என்று கேட்டான்.

அவள், "எந்த வித்தியாசமுமில்லை" என்று சொன்னாள்.

“நல்லது, ஒருக்கால் தேவன் என்னிடம் அதைக் கூறாமல் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கிறேன்.”

77. ஓ, என்னே! தேவன் தம்முடைய நம்பிக்கையை ஆபிரகாமில் வைக்க முடிந்திருக்காது. ஆனால், சாராள் எந்த நிலையில் இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவன் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது சாராளுடைய நிலையை அல்ல; அவன் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது தேவன் பண்ணியிருந்த வாக்குத்தத்தத்தைத் தான். அது உங்களுடைய கரத்தின் நிலைமையோ, அல்லது உங்களுடைய காதின் நிலைமையோ, அல்லது உங்களுடைய புற்று நோயின் நிலைமையோ, அல்லது அது எதுவாக இருந்தாலும் அதுவல்ல; நீங்கள்

பார்த்துக் கொண்டிருப்பது தேவனுடைய வார்த்தையைத் தான். தேவன் அவ்வண்ணமாகக் கூறினார். நீங்கள் உண்மையான சரக்குகளைக் கொண்டிருந்தாக வேண்டும்.

*(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)*



# தேவன், அவர் எவ்வளவு மகத்தானவர்!

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

## (GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

93. கவனியுங்கள். இப்பொழுது, அவன் அப்படியே சிறிது அதிக தூரமாக தொடர்ந்து சென்று கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். அவன் தொடர்ந்து அதிக தூரம் போகையில், லோத்து தன்னைத்தானே அவனைவிட்டுப் பிரித்துக் கொண்டு, அதிக தண்ணீர் நிறைந்த பிரதேசங்களை எடுத்துக் கொள்வதற்காகப் போய், அவன்

அந்தப் பட்டணத்தின் மேயராக ஆவதையும், அவனுடைய மனைவி மகத்தான தையல் விருந்துகள் மற்றும் யாவற்றினுடைய தலைவியாக ஆவதையும் நாம் காண்கிறோம். அவர்கள் சரியாகவே சென்று கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டனர்.

94. ஒருநாள் ஆபிரகாம் வெளியில் மரத்தின் கீழே அமர்ந்திருக்கையில், மூன்று மனிதர்கள் நடந்து வருவதை அவன் கண்டான். ஆபிரகாம் ஒரு தீர்க்கதரிசியாக இருந்து, அவன் அங்கேயிருந்த அந்த மூன்று மனிதர்களை உற்று நோக்கி, அவர்கள் யாரென்று அடையாளம் கண்டு கொண்டான். அவன் கூடாரத்திற்குள் நழுவிச் சென்று, அவன், "சாராளே,

சீக்கிரமாக கொஞ்சம் மாவை ஆயத்தம் செய்" என்று கூறினான்.

95. அவன் வெளியே ஆட்டு மந்தைக்குச் சென்று, ஒரு சிறு ஆட்டுக்குட்டியைப்பிடித்து... அல்லது, ஒரு சிறு ஆட்டைப் பிடித்து... அல்லது, ஒரு கன்றுக்குட்டியைப் பிடித்து, அதைக் கொன்று, அதை சமைத்து, அதை வெளியே கொண்டு வந்து, அதை அந்த மனிதர்களிடம் கொடுத்தான், அவன் அவர்களுடைய கால்களைக் கழுவினான். அவர்கள் உட்கார்ந்து, இளைப்பாறினர், அதன்பிறகு, அவர்கள் புறப்பட ஆயத்தமான போது, இரண்டு மனிதர்கள் சோதோமுக்குச் சென்றனர், அவன் அவர்களில் ஒருவரோடு பேசினான். அது சர்வவல்லமையுள்ள

தேவனைத் தவிர வேறு யாருமில்லை என்று வேதாகமம் கூறுகிறது.

96. அவர் தம்முடைய முதுகை கூடாரம் பக்கமாகத் திருப்பியவாறு இருந்தார். சாராள் வெளியே வரவில்லை. ஸ்திரீகள் இப்பொழுது செய்வது போன்று, அவர்கள் அப்போது மனிதர்களுக்கடுத்த காரியங்களில் ஈடுபடுவதில்லை. எனவே, அவள் கூடாரத்திலேயே தங்கியிருந்தாள், அவளுக்குரிய இடம் அதுதான். எனவே, அவள் அங்கே கூடாரத்தில் பின்புறத்தில் இருந்தாள், தேவன் ஆபிரகாமைப் பார்த்து, "என்னவென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

97. ஸ்திரீகளே, நான் உங்களை எந்தவிதத்திலும் புண்படுத்த

வேண்டுமென்று கருதவில்லை; நான் கிறிஸ்தவ பெண்மணிகளாகிய உங்களைக் கூறவில்லை. ஆனால் ஸ்திரீகள் அரசியலிலும், மற்றும் யாவற்றிலும் வருவதைக் காணும் போது, அது ஒரு அவமானமாக இருக்கிறது, இது... அமெரிக்காவானது... ஒரு ஸ்திரீ... நான் இதைத் தனியே விட்டு விடுவது நல்லது. ஆனால் இதை சற்று ஞாபகம் கொள்ளுங்கள். நான் இதை முன்னுரைக்கிறேன்: நாம் நிர்மூலமாக்கப்படுவதற்கு முன்பு, ஒரு ஸ்திரீ ஜனாதிபதியாய் இருப்பாள். அது உண்மை. நான் அதை ஒரு தரிசனத்தின் மூலமாக 1933ம் வருடத்தில் கூறினேன்.

98. நிச்சயமாக, இது ஒரு ஸ்திரீகளின் உலகம் தான். அது

எங்கிருந்து துவங்கினது? ஹாலிவுட்டிலிருந்து. உங்களுடைய எல்லா அசுத்தங்களும், அசுத்தமாக உடையுடுத்துவதும் மற்றும் காரியங்களும் அங்கிருந்து தான் துவங்கினது. அவை நமது வீட்டிற்குள் மெதுவாக வந்து புகுந்து விட்டன, மேலும் அவ்விதமாக காரியங்கள் மெல்ல மெல்ல வந்து புகுந்து விட்டன, மேலும் இப்பொழுது அது தொலைக்காட்சி வழியாகவும், மற்ற யாவற்றின் வழியாகவும் வருகின்றன. அது ஒரு அவமானம்! நாம் மீண்டும் அந்த நல்ல பழைமை நாகரீகமான அஸ்திபாரத்திற்குத் திரும்பி வரும் அளவுக்கு நம்முடைய எந்த எழுப்புதல்களுமே உதவி செய்யாது. ஓ, நான்... நல்லது, அதற்காக அநேக

காரியங்கள்; அந்த பிரசங்கிமார்கள் அதைக் குறித்து உங்களிடம் கூறுவார்கள்.

99. ஆனால் இப்பொழுது, கவனியுங்கள், ஆபிரகாம் தேவனிடம் பேசிக் கொண்டிருந்த போது, சாராள் பின்னால் கூடாரத்தில் இருந்தாள், தேவன் ஆபிரகாமிடம், "நான் ஒரு உற்பவகாலத்திட்ட மாதத்தில் உன்னைச் சந்திக்கப் போகிறேன் (ஆதியாகமம் 18:10), நீ ஒரு குழந்தையைக் கெண்டிருக்கப் போகிறாய்" என்றார்.

நல்லது, என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? சாராள் நகைத்தாள். தேவன் சாராளுக்கு தன் முதுகைக் காண்பித்தவாறு இருக்க, சுற்றிலும் திரும்பி, "சாராள் ஏன் நகைத்தாள்?" என்று கேட்டார்.

சாராளோ, "ஓ, இல்லை, நான் ஒருபோதும் நகைக்கவேயில்லையே" என்றாள்.

அவர், "ஓ, ஆமாம், நீ அதைச் செய்தாய்; நீ நகைத்தாய்" என்றார்.

100. அவள் மிகவுமாக பயந்து போனாள். பாருங்கள், அது அவளை அழித்துப் போடவில்லை. இப்பொழுது, அவள் தவறு செய்தாள், ஆனால் அவள் இழக்கப்படவில்லை; அவள் அப்படியே தவற்றைச் செய்தாள். அவள் பயந்து போனாள்.

101. கவனியுங்கள். அதன்பிறகு... வெளியே நடந்து செல்லத் துவங்கின போது, இந்த மனிதர் மறைந்து போனார், ஆபிரகாம், "அது கர்த்தர்" என்றான், அவன் தேவனாகிய

கர்த்தரிடம் பேசினான். தேவன் அங்கேயிருந்தார்.

102. நான் ஒரு சில வருடங்களுக்கு முன்பு, வெளியிடப் போவதாய் இருந்த, ஒரு சிறு புத்தகத்தில் நான் ஒரு சமயம் அதன் பேரில் எழுதியிருந்தேன், ஒரு ஊழியக்காரர் என்னுடைய உதவி கேட்டு அழைப்பு விடுத்தார். அவர், "பிரன்ஹாம் பிரசங்கியாரே, அது தேவன் என்று நீர் விசுவாசிப்பதாக என்னிடம் கூற விரும்புகிறீரா?" என்றார்.

நான், "அதைத்தான் வேதம் கூறுகிறது" என்றேன்.

அவர், "அவர் அந்த சரீரத்தை எங்கிருந்து பெற்றார்?" என்று கேட்டார்.

நான், "நல்லது கவனியும், அவர் எவ்வளவு மகத்தான தேவன் என்று நீர் புரிந்து கொள்ளத் தவறி விட்டீர்" என்றார்.

103. அந்த சரீரம் எதனால் உண்டாக்கப்பட்டிருந்தது? கொஞ்சம் பெட்ரோலியம், கொஞ்சம் அண்ட வெளிச்சம், அவ்விதமான ஒரு சில காரியங்களை ஒன்று சேர்த்து, அணுக்களோடு ஒட்டுக் கொண்டன.

104. இங்கே, சமீபத்தில், என்னிடம் மீதமிருந்த ஒரு சில முடிகளை சீவ முயற்சித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய மனைவி என்னிடம் இவ்வாறு கூறினாள், அவள் என்னைப் பார்த்து, "பில்லி, தேனே, நீர் வழுக்கை தலையாய் ஆகி வருகிறீர்" என்றாள்.

நான், "ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், நான் அவைகளில் ஒரு முடியையும் இழந்து போகவில்லை" என்று கூறினேன்.

அவள், "நல்லது, அவைகள் எங்கேயிருக்கின்றன?" என்று கேட்டாள்.

105. நான், "சரி, அன்பே, நான் உன்னிடம் ஒரு காரியத்தைக் கூறப் போகிறேன். நான் அவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பு அவைகள் எங்கேயிருந்தன என்று என்னிடம் கூறினால், நான் அவைகளிடம் வரும்படி, அவைகள் எனக்காக எங்கே காத்துக் கொண்டிருக்கின்றன என்பதை நான் உன்னிடம் கூறுவேன்" என்றேன். ஆமென்! நான் அதை

விசுவாசிக்கிறேன்! சரி! நான் எதையும் இழந்து போகவில்லை. அவைகள் இல்லாதிருந்தன; அதன்பிறகு அவைகள் இருந்தன; அதன்பிறகு அவைகள் இல்லை; அவைகள் இருந்த இடத்தில் அவைகள் இருக்கின்றன, ஏதோவொரு நாளில் தேவன் மீண்டுமாக என்னுடைய திடகாத்திரமான இயற்கையான சரீரத்தோடு கூட அவைகளை எனக்குத் திரும்பவும் தருவார். ஆமென்! நான் தேவனுடைய வார்த்தையின் மூலம் அதை நிரூபிக்கிறேன்.

106. கவனியுங்கள். ஏன், தேவன், அவர் எவ்வளவு மகத்தானவர்! அவர் அங்கே சென்று, "காபிரியேலே, இங்கே வா என்று கூறுகிறேன். வியூயூ!" என்று

கூறுவதை என்னால் காணமுடிகிறது. கொஞ்சம் அணுக்கள் ஒன்றாக சேர்க்கப்படுகிறது. "அந்த சரீரத்திற்குள் நடந்து செல். மிகாவேலே, இங்கே வா. வியூயூ! நீ அந்த ஒன்றிக்குள் நடந்து செல்." அவரோ தமக்கு சொந்தமான சரீரத்திற்குள் அடி எடுத்து வைத்து, வெளியே நடந்து சென்றனர்...

107. அதுதான் தேவன். அவர் எல்லா வெளிச்சத்தையும், மற்ற யாவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அவர் அங்கே நடந்து சென்றார், அவர் தமது வஸ்திரங்களில் தூசியைக் கொண்டிருந்தார். அது மட்டுமல்ல, ஆனால் அவர் கன்றுக்குட்டியைப் புசித்து, பசுவின் பாலைக் குடித்து, சோள ரொட்டியைச் சாப்பிட்டார். அது

உண்மை! தேவன் தாமே தாம் ஜீவித்துக் கொண்டிருந்த சரீரத்தில் பசியைக் கொண்டிருந்தார்.

108. அப்படியானால், அதே தேவனே உங்களை இன்றிரவு பாவத்திலிருந்து இரட்சித்து, ஏதோவொரு நாளில் உங்களை உயிரோடு எழுப்புவார் என்பதற்காக நீங்கள் சந்தோஷப்படவில்லையா? அந்த அணுக்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும். ஓ, அது அவ்வளவு சிறிய ஒரு காரியமாய் உள்ளதே, எவ்வளவு சிறிய... எல்லைக்குட்பட்ட சிறிய சிந்தைகள் தேவனுடைய முடிவில்லாத சிந்தையை அறிந்து கொள்ள முயற்சி செய்யக் கூடும்.

## ~ 16 ~

(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)

# முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

இப்பொழுது, அவன் ஒருநாள் அங்கே வெளியில் உட்கார்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டுகொள்கிறோம். நாம் இதை ஒரு சிறு நாடகமாகக் கொடுப்போம், அப்போது இங்கேயிருக்கும் இந்தச் சிறு பிள்ளைகள் அதை தெளிவாகக் கேட்க முடியும். இப்பொழுது, ஆபிரகாம் ஒரு காலையில் கூடார வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அங்கே அவனுடைய இடத்திற்கு முன்பு, ஒரு பெரிய சிந்தூர மரம் (oak tree) இருந்தது. அந்த கருவாலி மரம் (oak) இன்னும் அங்கே நிற்பதாக அவர்கள் உரிமை கோருகிறார்கள். அவர்கள் அதை பாதுகாக்கப்பட்ட இடமாக (preserved) வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். நல்லது, அங்கே தான் அவன் தன்னுடைய கூடாரத்தை அடித்திருந்தான், அங்கே வெளியே வனாந்தரத்தில்... லோத்துவோ அங்கே கீழே இருந்தான், என்னே, அவர்கள் அப்படிப்பட்ட ஒரு காரியத்தை உடையவர்களாக இருந்தார்கள் என்று ஊகிக்கிறேன், அவன் புகைப்பிடிப்பதற்கான ஒரு பெரிய சுருட்டை (cigar) வைத்திருந்தான், மேலும் அவன் அந்தப் பட்டணத்தின் பெரு நகராண்மைக் கழகத் தலைவராக (mayor)

இருந்தான், உங்களுக்குத் தெரியும். திருமதி. லோத்தும் அவளுடைய குமாரத்திகளும் மற்றும் அவர்கள் எல்லாருமே புதுப்பாணி நாகரிக நடை, உடை பாவனைகள் கண்காட்சிகள் (fashion shows) நடக்கும் பல இடங்களுக்குப் போய்க்கொண்டும், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டும், அந்நாட்களின் பாணிகளுக்குப் (styles) பின்னால் ஒப்பனை செய்து (அழகுபடுத்திக்) கொண்டும், இருந்தார்கள். **ஆனால் சாராளோ உண்மையாக நின்றாள்; ஆபிரகாமும் உண்மையாக நின்றான்; அவர்கள் தேவனோடு தரித்திருந்து, அங்கே வெளியில் தங்கியிருந்தார்கள்.**

35. இப்பொழுது, என்ன சம்பவித்தது? ஒருநாள் ஆபிரகாம் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஏறக்குறைய பகல் பதினொரு மணியளவில், நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அவன் அங்கே அதனூடாக ஏறி வந்து கொண்டிருப்பவர்களை நோக்கிப் பார்க்கிறான், இதோ மூன்று மனிதர்கள், தங்கள் வஸ்திரங்கள் முழுவதும் தூசி படிந்தவர்களாக, நெடுக நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

**அதைக் குறித்து ஏதோவொன்று உள்ளது என்று உங்களுக்குத் தெரியும், நீங்கள் முழுவதுமாக ஜெபித்து முடித்துவிடாமல் இருப்பீர்களானால் *(prayed up)*, தேவனுடைய ஆசீர்வாதமானது சரியாக உங்கள் பக்கத்திலேயே கடந்து போக முடிந்தாலும், அதை அறியாமலே இருப்பீர்கள்.** நான் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், **முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

சமீபத்தில் ஐயர்லாந்திலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறு ஐரிஸ் பெண்மணி அங்கே இருந்தாள், அவள் ஒரு கப்பலில் இருந்ததாக அவர்கள் கூறினார்கள் மேலும் அவள்... ஏறக்குறைய அந்நேரத்தில், ஓ, அவர்கள் ஏறக்குறைய நியூயார்க்குக்கு வந்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு பெரிய கடும் புயலானது அந்த சமுத்திரத்தின் குறுக்கே வீசியடித்தது, கப்பலானது இக்கட்டில் இருக்கிறது என்ற சமிக்சையையும் (SOS's) வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார்கள், அதுவோ தண்ணீரில் தலைகீழாகப் பாய்ந்து இடத்திற்கிடம் மூழ்கிக் கொண்டேயிருந்தது. அப்போது இசைக்

கருவிகளை இசைக்கும் கூட்டம் இசைத்துக் கொண்டிருந்தது; அவர்களால் முடிந்த எல்லா ராக்-அன்-ரோல்களையும், மற்றும் அதைப் போன்ற எல்லாவற்றையும் அவர்கள் இசைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொடங்கினார்கள் - இசைக்குழு இசைக்கத் தொடங்கினது... அப்போது கப்பல் தலைவன் (Captain), "எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்; நீங்கள் உங்கள் சபையில் ஜெபிக்கிற விதமாக எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்" என்றான். உடனே பாண்டு இசைக் கருவிகள் "உம்மண்டை, என் தேவனே" என்று இசைக்கத் தொடங்கினது. அவர்கள் எல்லாரும் அவ்வாறு செய்யத் தொடங்கினார்கள்.

36. ஒரு சிறு ஐரிஸ் பெண்மணியோ தரையில் மேலும் கீழும் நடக்கத் தொடங்கினாள். அந்த கேப்டன், "நம்மால் மாத்திரம் இந்தப் புயலுக்கு முப்பது நிமிடங்கள் தாக்குப்பிடிக்கக் கூடுமானால், நாம் துறைமுகத்திற்குள் வந்து, நங்கூரத்தை போடுவோம். ஆனால் நம்மால் முப்பது நிமிடங்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், நாம் கடலின் அடியில் இருப்போம்" என்றான்.

அந்தச் சிறு ஐரிஸ் பெண்மணியோ, "தேவனுக்கு மகிமை. அல்லேலூயா" என்றாள்.

எனவே கப்பல் தலைவன் (Captain) மேலே நடந்து வந்து, "சீமாட்டியே, நான் என்ன சொன்னேன் என்று புரிந்ததா?" என்று கேட்டான். அவன்...

அவள், "நீர் சொன்னது எனக்குத் தெளிவாகப் புரிந்தது, ஐயா" என்று சொன்னாள்.

அவன், "நம்மால் இந்தப் புயலில் முப்பது நிமிடங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், இப்பொழுதிலிருந்து முப்பது நிமிடங்களில் நாம் கடலின் கீழே இருக்கலாம் என்று தான் சொன்னேன்" என்றான்.

அதற்கு, "நீர் என்ன அர்த்தத்தில் (சொன்னீர்) என்பது எனக்குப் புரிந்தது. அல்லேலூயா. தேவனுக்கு துதி உண்டாவதாக" என்றாள்.

"நீங்கள் ஏன் ஜெபிக்கவில்லை?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "நான் முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up). இனியும் ஜெபிக்க வேண்டியதில்லை. நான் துவக்க முதலே முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up)" என்று கூறினாள்.

நல்லது, "நீங்கள் கடலின் அடியில் இருக்கலாம் என்று அறிந்திருந்தும், நீங்கள் ஏன் அவ்விதமாக அல்லேலூயா என்று கூற முடிந்தது?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "ஐயா, நான் நியூயார்க்கில் வசிக்கும் என்னுடைய ஒரு மகளைக் காண, ஐயர்லாந்திலிருந்து வரும் என்னுடைய பாதையில் இருக்கிறேன். எனக்கு ஒரு மகள் மகிமையில் இருக்கிறாள், ஒருவள் நியூயார்க்கில் இருக்கிறாள். நான் கீழே போவேன் என்றால், அங்கே மேலேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன். நாம் கரையைப் பிடித்து (land) விட்டோம் என்றால், அங்கேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன்" என்றாள். அது சரியே. முற்றிலுமாக ஜெபித்து முடித்து விடுதல் (Prayed up)... ஆமென். தரித்திருப்பதற்கான வழி அதுதான், முழுவதும் ஜெபிப்பது. அதற்காக ஆத்தமாகுங்கள். அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருத்தியை சந்திக்கப் போகிறாள். அது... என்று அவள் அறிந்திருந்தாள். அங்கே மேலேயோ அல்லது இங்கே கீழேயோ, அது எந்த வித்தியாசத்தையும் அவளுக்கு ஏற்படுத்தவில்லை, அது செய்தது - அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருவளைக் காணப் போகிறாள். இப்பொழுது, அது

நல்லது, அது அருமையானது. **சபையானது எல்லா நேரமும் அந்தவிதமாகத்தான் இருக்க வேண்டும், முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

37. **ஆபிரகாம் முழுவதுமாக ஜெபித்து முடித்து விட்டு, அங்கு வெளியே உட்கார்ந்திருந்தான்.** ஒருக்கால் லோத்து அங்கே கீழே இருந்து, அங்கே அந்த வனாந்தரத்திலே என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அறியாதிருந்தான். ஆனால் ஆபிரகாம் நோக்கிப் பார்த்தபோது, அது சற்று வினோதமாக காணப்படுவதை அவன் அடையாளம் கண்டுகொள்ளும் வண்ணமாக, அங்கே வெளியே அதன் முன்பாக நடந்து வந்து கொண்டிருந்த அந்த மனிதரைக் குறித்து ஏதோவொன்றிருந்தது. ஓ, என்னே. வினோதமாக தோற்றமளிக்கும் மனிதர்... அவன் ஓடிச்சென்றான், நீங்கள் கவனிப்பீர்களானால், முதல் முதல் காரியத்திலேயே அவன், "என்..." என்றான். அவன், "என் ஆண்டவன்மார்களே" என்று கூறவில்லை. ஷரிவ்போர்ட்டில், அன்றொரு இரவு அந்த கருத்துக்குறிப்பைக் கூறின அந்த யூத

சகோதரனோடு நான் நிச்சயமாகவே முரண்படுகிறேன். "என் ஆண்டவன்மார்களே" என்று அவன் கூறவில்லை, ஆனால், "என் ஆண்டவரே (My Lord)" என்று தான் கூறினான், ஆ-ண்-ட-வ-ரே, ஒருவர். "என் (பெரிய எழுத்து) ஆ-ண்-ட-வ-ரே, நீர் உள்ளே வர மாட்டீரா." இப்பொழுது, உங்களில் யாராவது அங்கு மொழிபெயர்ப்பாளரைக் கவனித்துப் பாருங்கள், அது ஏலோகிம் என்பதாக இருந்தது, ஆபிரகாம் அவரை அழைத்தான்... அவரை உள்ளே அழைத்து வந்தான். "நீர் உள்ளே வந்து உட்கார மாட்டீரா. நான் போய் உமக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து, உம்முடைய கால்களைக் கழுவுகிறேன். துணிக்கை அப்பமும் (morsel of bread) எடுத்துக்கொள்ளும். அதன்பிறகு நீர்... உமது-உமது வாஞ்சையைத் தீர்த்துக்கொள்ளும், பிறகு நீர் எங்குபோக வேண்டுமானாலும் அங்கே போகலாம்" என்று கூறிவிட்டு, அவன் அதனூடாக நழுவிச் சென்று, "சாராளே, சாராளே, ஸ்ஸ். யாரோ ஒருவர் அங்கே வெளியில் இருக்கிறார்; மிக சீக்கிரமாக கொஞ்சம் மாவையோ, அல்லது சோள மாவையோ (cornmeal) ஆயத்தம் செய்" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது.

*செய்தி: ஆபிரகாம்*, பிப்ரவரி 11, 1961

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*



# அதற்கு விரோதமான ஒரு வார்த்தையும் ஒருபோதும் மன்னிக்கப்படாது





**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

46. இப்பொழுது, ஆபிரகாம், ஆபிரகாம் அதனோடு தொடர்பு கொள்ளாமல் விலகி இருந்தான் என்பதை நாம் கண்டுகொள்கிறோம்; **அவன் தெரிந்து கொள்ளப்பட்டு, வெளியே அழைக்கப்பட்ட சபையாக இருந்தான்**. மேலும், மாம்ச சரீரத்தில் இருந்த அந்த மனிதரை ஞாபகம் கொள்ளுங்கள், அந்த மனிதர் கன்றுக்குட்டியின் மாம்சத்தைப் புசித்தார். அவர் பசுவின் பாலைக் குடித்தார். அவர் அவனுடைய அப்பத்தைக் குடித்தார் மேலும் ஆனால் - அப்பத்தைப் புசித்து, அதன்மேல் வெண்ணெயை கொண்டிருந்தார், அவர் பசுவின் பாலைப் பருகினார். ஆபிரகாம் அவரை தேவன் என்று அழைத்தான். கவனியுங்கள்-எடுத்துக்கொள்ளுங்கள்... மொழிபெயர்ப்பாளர்களைக் (translators) கவனித்து, அதைத் தேடி, அது சரிதானா என்று கண்டுபிடியுங்கள்: ஏலோகிம், தேவன். இப்பொழுது, இது ஏதோவொன்றை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும், நீங்கள் அதை

திட்டமாகப் பார்க்கவிடும்படி, நாம் விரும்பும் ஏதோவொன்றாக இருந்தது என்பதையும் நீங்கள் கவனிக்க விரும்புகிறேன்.

**இப்பொழுது, கவனியுங்கள், அதன்பிறகு இரண்டு மனுஷர்கள் இறங்கிச் சென்ற போது, அந்தப் பிரசங்கிமார்கள் பிரசங்கம் பண்ணும்படியாக இறங்கிச் சென்றார்கள் என்பதைக் கண்டுகொள்கிறோம், சோதோமில் பிரசங்கம் பண்ணும்படி, இரண்டு தூதர்கள் இறங்கிப் போனார்கள்**... அவர்கள் ஒருபோதும் இதையோ, இந்தக் காரியத்தையோ, அவர்கள் அங்கே இறங்கிச் சென்று, தங்கள் அடையாளத்தைக் காண்பித்திருந்த இந்த அடையாளத்தையோ செய்யவில்லை, **அவர்கள் அவர்களை வெளியே கொண்டு வரும்படிக்கே வந்தார்கள்**. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட சபை பெற்றிருந்த அதே அடையாளம் அதுவாக இருக்கவில்லை. **தெரிந்து கொள்ளப்பட்ட சபையோ வேறொரு அடையாளத்தைப் பெற்றது**. மேலும் இப்பொழுது, அங்கே வெளியே இருந்த சபை எதைப் பெற்றது என்பதைக் கவனியுங்கள். **தெரிந்து கொள்ளப்பட்ட சபையோடு பின்னால் தங்கியிருந்த அந்த ஒருவர்.** அவர் என்ன பேசிக் கொண்டிருந்தார் என்பது

ஞாபகம் இருக்கிறதா? அவர், "ஆபிரகாமே..." என்றார். தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த அவனுடைய புதிய பெயரைக்கொண்டு அவனை அழைத்தார். "ஆபிரகாமே, சாராள் (சா-ரா-ள், அவளுடைய புதிய பெயர்) எங்கே?" ஏன், அவர்களுக்கு அதைக் கொடுத்த அந்த ஒருவர் அவர் தான். ஆமாம்.

47. யாரோ ஒருவர் சொன்னார், நான் அநேக நேரங்களில் இந்த விவரத்தைக் கூறியிருக்கிறேன், அவர், "சகோதரன் பிரன்ஹாமே, அந்த மனிதர் தேவனாக இருந்தார் என்று விசுவாசிக்கிறீரா?" என்று கேட்டார்.

நான், "அது தேவன் என்று வேதாகமம் கூறுகிறது" என்றேன். பாருங்கள்? **அவர் தேவனாக இருந்தார். அவர் சிருஷ்டிகராக இருந்தார்.** அவருக்கு விருப்பமான எதையும் அவரால் செய்ய முடிந்தது. **அவர் கொஞ்சம், பெட்ரோலியத்தையும், காஸ்மிக் வெளிச்சத்தையும், கால்சியத்தையும், போட்டாஷையும் எடுத்து, "பியூ!" என்று அதற்குள் ஊதி, அந்த சரீரத்திற்குள் அடியெடுத்து வைத்து, இறங்கி வந்தார்.** சரியாக அந்தவிதமாகத்தான் அவர் அதைச் செய்தார். அதேவிதமாகத் தான் அங்கிருந்த

தூதர்களையும் அவர் கொண்டிருந்தார். அவரால் அதே காரியத்தைச் செய்ய முடியும். நாம் எங்கிருந்து வந்தோம்? இந்த பூமியை உண்டாக்கினது யார்? பூமியானது எதிலிருந்து உண்டாக்கப்பட்டதோ, பூமியை உண்டாக்கும்படியாக அந்த பொருட்கள் அவருக்கு எங்கிருந்து கிடைத்தன? அவர் வெளியில் எங்கு சென்று, எங்கிருந்து இதைப் பெற்றார் என்று என்னிடம் கூறுங்கள். நாம் அமர்ந்து கொண்டிருக்கும் இந்த இதே பூமியானது தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தப்பட்டதாக இருக்கிறது. இந்த பிரசங்க பீடமானது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. இது வெளிப்படுத்திக்காட்டப்பட்ட தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. தேவன் அதை உரைத்தார், அவர் ஒரு சிருஷ்டிகராக இருக்கிறார், அதை உண்டாக்குவதற்கு இங்கே இல்லாத காரியங்களைக் கொண்டே அவர் அதை உண்டாக்கினார். அவரே அதை சிருஷ்டித்தார். அவருக்கு ஒரு நோக்கம் இருந்தது, அவரால் சிருஷ்டிக்க முடியும். அவருக்கு விருப்பமான எதுவாக இருந்தாலும், அவரால் அதைச் செய்ய முடியும்; அவர் தேவனாக இருக்கிறார்.

48. ஆபிரகாம் அவரை தேவன் என்று அழைத்தான். அது அவராகத்தான் இருந்தது.

**ஆபிரகாம் அதை அறிந்திருக்க வேண்டியிருந்தது, அவன் அவரிடம் பேசினான், அவனுடைய ஜீவிய நாட்கள் எல்லாம் அவன் அவரோடு பேசி வந்தான்.** அவர் யார் என்று அவன் அறிந்திருக்க வேண்டும் என்று நான் ஊகிக்கிறேன். நிச்சயமாக. "நான் உனக்குப் பண்ணின இந்த வாக்குத்தத்தத்தை நான் நிறைவேற்றப் போகிறேன்" என்று அவனிடம் கூறினார். அங்கே பின்னால் அவனிடம் பேசிக் கொண்டிருந்த அந்த ஒருவர் யார்? "நான், நானே அந்த ஒருவர்" என்று அவர் கூறினார். மேலும் கவனியுங்கள், அதன்பிறகு அவர், "ஆபிரகாமே, உன் மனைவியாகிய சாராள் எங்கே?" என்று கேட்ட போது. ஆபிரகாமே, ஆபிராமே என்று அல்ல, ஆபிரகாமே... தேவன் முந்தின அதிகாரத்தில் தான் ஆபிரகாம் என்ற அந்தப் பெயரை அவனுக்குக் கொடுத்திருந்தார். அவர்களுக்கு செய்தித்தாள்களோ, தொலைக்காட்சிகளோ மற்றும் காரியங்களோ அந்நாட்களில் கிடையாது. ஆபிரகாம் தனியாக அங்கே வெளியில் இருந்தான், அங்கே வெளியிலே, அவனும், அவனுடைய மனைவியும், அவனுடைய-அவனுடைய ஜனங்களும், அவனுடைய வேலைக்காரர்களும் இருந்தார்கள். இந்நிலையில் தேவன் அவனுக்குத் தரிசனமாகி, அவனுடைய பெயரை மாற்றினார், அந்த

தூதனானவர் அவனை ஆபிரகாம் என்று தான் அழைத்தார். தேவன் சாராயின் பெயரை சாராள் என்று மாற்றி, அவளை சாராள் என்ற பெயரால் அழைத்தார். “உன் மனைவி சாராள் எங்கே?” அவன் விவாகம் ஆனவன் என்பதும் கூட அவருக்கு எப்படி தெரிந்தது? அவர் ஒரு அந்நியராய் இருக்க, அவனுடைய பெயர் ஆபிரகாம் என்று எப்படி தெரிந்தது? அவனுடைய பெயரை அவர் ஆபிராம் என்பதிலிருந்து ஆபிரகாம் என்று அவர் மாற்றிவிட்டதை அவர் எவ்வாறு அறிந்திருந்தார்? அவர் சாராளின் பெயரை சாராள் என்று மாற்றி விட்டிருந்தார் என்பது, எப்படி - அல்லது சாராயின் பெயரை சாராள் என்று மாற்றி விட்டிருந்தார் என்பது அவருக்கு எப்படித் தெரிந்தது? இந்தக் காரியங்கள் அவருக்கு எப்படித் தெரிந்தது?

49. அதற்கு ஆபிரகாம், “அவள் அங்கே பின்னால், உமக்குப் பின்னாலுள்ள அந்தக் கூடாரத்தில் இருக்கிறாள்” என்றான்.

அவர், “ஆபிரகாமே, நான் உன்னிடம் வருகைதரப் போகிறேன்” என்றார். வேறு வார்த்தைகளில் கூறினால், “நான் உனக்கு இந்தப் பிள்ளையைத் தரப் போகிறேன் என்று உனக்கு வாக்குப்பண்ணியிருந்தேன், நீ என்னுடைய

வார்த்தையை விசுவாசித்திருக்கிறாய், இப்பொழுது, ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நான் வருகை தரப் போகிறேன, நீ இந்தக் குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறாய்" (என்றார்).

சாராளோ, பின்னாலிருந்து காதில் ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தவளாய் (ear-dropping), தனக்குள்ளே கூறினாள், இப்பொழுது; **அவள் தனக்குள்ளே தான் அதைக் கூறினாள். இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், தன்னுடைய இருதயத்தின் கீழே,** "நான் வயது சென்றவளாகவும், 90 வயது பாட்டியாகவும், பெரிய, பெரிய, பெரிய கிழவியாகவும், என்னுடைய கணவனாரோ வயதானவராயும், அங்கே வெளியிலிருக்கும் என் ஆண்டவன், 100 வயதான முதியவராகவும், இருக்க எனக்கு எப்பொழுதாவது சந்தோஷம் உண்டாகுமோ, இதோ நானோ 90 வயதாக இருக்க, நான் எப்பொழுதாவது மறுபடியும் ஒரு வாலிப பெண்ணாக ஆவேனோ?" **என்று [கூறினாள்.] அவள், "அது வேடிக்கையாக உள்ளது" என்று எண்ணி, நகைத்தாள்.**

தூதனானவர், "சாராள் ஏன் நகைத்தாள்?" என்று கேட்டார். அது மட்டுமல்ல, ஆனால் அவர்

சொன்னார், சாராள் தன்னுடைய இருதயத்தில் என்ன நினைத்தாள் என்ற அந்த வார்த்தைகளை மீண்டும் ஆபிரகாமிடம் கூறினார். அவர், "அது எப்படி இருக்க முடிந்தது?" என்று கூறினார். ஆமென். அங்கே தான் காரியம். அந்தக் கூடாரத்திற்கு நேராக தம்முடைய முதுகைத் திருப்பினவராய் உட்கார்ந்து கொண்டிருந்தார்... அப்போது சாராள் உண்மையாகவே பயந்து போனாள். அவள் என்ன செய்திருந்தாள் என்பதைக் கண்டிருந்தாள். "'எனக்கு எப்பொழுதாவது என்னுடைய கணவரோடு எப்படி மீண்டும் இன்பம் உண்டாயிருக்க முடியும்?' என்று சாராள் ஏன் நகைத்து தன் இருதயத்திற்குள் பேசிக் கொண்டிருந்தாள்?" ஆனால் அவருடைய வார்த்தை உறுதிசெய்வதாக இருந்தது; அவர் தேவனாக இருந்தார்.

50. இப்பொழுது, அது என்னவாக இருந்தது? இப்பொழுது, இயேசு அந்த அதே காரியத்தைக் குறிப்பிட்டார். **அவர், "லோத்தின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரனுடைய வருகையிலும் நடக்கும்" என்று கூறினார்.** இப்பொழுது, கவனியுங்கள், நீங்கள் ஏன் வெளியே வந்து, ஸ்தாபனங்களின் அந்தப் பெரிய

கட்டுப்பாட்டு மையங்களுக்கு (nerve centers) ஓடிப்போகக் கூடாது? ஸ்தாபனங்களின் அந்தப் கட்டுப்பாட்டு மையங்களுக்கு (nerve centers) அனுப்பவில்லையா? தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கோ, அது அங்கே இருக்கிறது. **அவர்கள் ஒருபோதும் அதை விசுவாசிக்க மாட்டார்கள்.** நான் இரவுநேரத்தில் இங்கே நின்று கொண்டிருக்கிறேன் என்பதை அறிவேன், அன்றொரு இரவில் நான் பகுத்தறிதலைக் கொண்டிருந்த போது, மேலும் சரியாக இப்பொழுதே அதை உணருகிறேன்; **இங்கே உள்ளேயிருக்கும் அநேகர் அதை விசுவாசிக்க மாட்டார்கள். என்னிடம் சொல்லாதீர்கள்; என்னால் உங்கள் பெயரையும் அழைக்க முடியும்.** அது சரியே. எது சரி என்று என்னிடம் கூற வேண்டாம். அது சரியே. **உங்களுடைய வியாதியை நான் அறிவேன். நிச்சயமாகவே, சரியாக இங்கேயே உங்கள் வியாதியை தேவனால் என்னிடம் கூற முடியும்.** நான் அதை உணருகிறேன். **அதைக் குறித்து ஒரு மாயக்காரனாக நீங்கள் ஏன் விளையாட முயற்சிக்கிறீர்கள்? உண்மையில் நீங்கள் யாராக இருக்கிறீர்களோ, அதுவாகத்தானே**

**நீங்கள் இருப்பீர்கள்?** ஒரு காரியம் என்னவென்றால், நீங்கள் பயப்படுகிறீர்கள். நான் உங்களைப் பழிக்கவில்லை. **அதற்கு விரோதமான ஒரு வார்த்தையும் ஒருபோதும் மன்னிக்கப்படாது.** ஆனால் பிரசங்கிமார்களாகிய உங்களில் சிலர் நினைக்கிறது போல, வேதவாக்கியங்கள் எந்த மறைஞானமாகவும் (mysticism) இல்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன். **அது எந்த மாற்றார் உளம் அறியும் சிறப்பாற்றலாகவும் (telepathy) இல்லை. தேவன் பாவமுள்ள உங்கள் ஆத்துமாவின் மேல் இரக்கமுள்ளவராயிருப்பாராக. உங்களுக்கு ஒரு பிரசங்க பீடம் அவசியமில்லை; உங்களுக்கு ஒரு பலிபீடம் தான் தேவையாக இருக்கிறது.** அது சரியே. தேவனோடு சரிப்படுத்திக் கொள்ளுங்கள். **அதற்கு விரோதமான ஒரு வார்த்தையும் இம்மையிலும் மறுமையிலும் ஒருபோதும் மன்னிக்கப்படாது என்பது நினைவிருக்கட்டும்.** இப்பொழுது, "அது நானல்ல" என்று நீங்கள் கூறலாம். நீங்கள் யாரென்று என்னிடம் கூற வேண்டாம்; எனக்குத் தெரியும். புரிகிறதா? ஆம், ஐயா. எனவே இப்பொழுது கவனியுங்கள், நான் அப்படியே

உங்களை எச்சரித்துக் கொண்டிருக்கிறேன். **அது சம்பவிக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆமென்.**

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)









# அவர்கள் ஜெயங்கொள்ளும் ஒவ்வொரு முறையும், அவர்களுக்கு ஒரு புதிய நாமம் கொடுக்கப்பட்டது



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

26. அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை காண்பிக்கும்படி, அவர் 17ம் அதிகாரத்தில் அவனுடைய பெயரை மாற்றினார். மேலும் சாராளுடைய பெயரையும் மாற்றினார். அது சரியே. அந்தப் பெயர்களைக் கவனித்துப் பாருங்கள், அது ஏதோவொன்றை அர்த்தப்படுத்துகிறது. அவர் ஏன் யாக்கோபுடைய பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார்? அவர் ஏன் சவுலுடைய பெயரை பவுல் என்று மாற்றினார். அவர் ஏன் அந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் செய்தார்? அவர் ஜெயங்கொண்டு, மகிமைக்குள் பிரவேசித்த பிறகு, தம்முடைய பெயரை மாற்றிக் கொண்டதாக, அவர் கூறினார். வெளிப்படுத்தின விசேஷத்தில், ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஒரு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டிருக்கிறது, அவர் தம்முடைய புதிய நாமத்தை அறியப்பண்ணுவதாக. அது சரியே. அவர்கள் ஜெயங்கொள்ளும் ஒவ்வொரு முறையும், அவர்களுக்கு ஒரு புதிய நாமம் கொடுக்கப்பட்டது.

**ஆபிரகாம், அவன் முடிவில் ஜெயங்கொண்ட போது, ஆபிராம் என்ற பெயரானது அவனை விட்டு எடுக்கப்பட்டு, "நீ இனி ஆபிராம் என்று அழைக்கப்பட மாட்டாய், ஆனால் ஆபிரகாம் என்று அழைக்கப்படுவாய்" என்று கூறினார். அவனுக்குத் தம்முடைய நாமத்தில் (ஒரு) பாகத்தைக் கொடுத்து, அவருடைய நாமத்தை அதில் பொருத்திக் கொண்டார்**: **ஏலோ-கிம்** (Elo-him). **ஹி-ம்** (H-i-m) மற்றும் **ஹா-ம்** (h-a-m): **ஏலோகிம்**. **வேறு வார்த்தைகளில் கூறினால், நான் சகலத்திற்கும் பிதாவாக இருக்கிறேன்.** புரிகிறதா? **நான் உன்னையோ தேசங்களுக்குப் பிதாவாக ஆக்குகிறேன்**, **எனவே நான் மாற்றிவிட்டு, என்னுடைய நாமத்தில் (ஒரு) பகுதியை உனக்குக் கொடுத்திருக்கிறேன்**, **தேசங்களுக்குப் பிதா, ஹா-ம்** (h-a-m). புரிகிறதா? ஏலோ-கிம், ஆபிரகாம்... அது ஒரு நல்ல சொற்றொடராக உள்ளது, நீங்கள் எப்பொழுதாவது அதைப் பற்றி சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? இன்றைக்கு

கிரகாம் என்று அழைக்கப்படும் ஒரு மகத்தான சுவிசேஷகர் இருக்கிறார், கி-ர-ஹா-ம் (G-r-a-h-a-m), பில்லி கிரகாம், அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், தேவன் எப்படியாக தம்முடைய இரக்கத்தில், அவர் எப்படியாக முன்னறிந் திருக்கிறார், அவர் செய்கிற காரியங்கள்.

இப்பொழுது, அவர் அங்கே என்ன செய்தார் என்பதைக் கவனியுங்கள், **அவர் சாராயை சாராள் என்று மாற்றினார்.** சாராயின் பெயரை, சாராய் என்பதிலிருந்து சாராள் என்று மாற்றினார். **"சாராள்" என்பதற்கு "இராஜகுமாரத்தி (*princess* - அரசிளங்குமாரி, இளவரசி, இராஜாவின் குமாரத்தி)" என்று அர்த்தம் இருப்பதைக் கவனியுங்கள். அவன் தேசங்களுக்கு பிதாவாக இருந்தான்.** ஓ, அது அழகாயில்லையா? **அந்த வயதான மனிதனுக்கும், வயதான பெண்ணுக்கும், இப்பொழுது நூறு வயது, அந்த வாக்குத் தத்தமானது நிறைவேறப் போகிறது.**

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)

நான் அவருடைய
உயிர்த்தெழுதலின்
வல்லமையில் அவரை
அறிந்துள்ளதற்காக நான்
இன்றிரவு
மகிழ்ச்சியடைகிறேன்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

(GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

நீங்கள் ஒரு சிறு பிள்ளை பருவத்தில் இருந்து படிப்படியாக வளருகிறீர்கள், உங்களுடைய முதலாவது சிறிய செல் வளர ஆரம்பிக்கும் போது - உங்களுக்கு ஏறக்குறைய 21 அல்லது 22 வயதாகும் மட்டுமாக, ஒருக்கால் உங்களுக்கு 25 வயதாகும் வரை

அது (வளருகிறது.); நீங்கள் அப்போது தான் உங்களுடைய மிகச் சிறந்த நிலையில் இருக்கிறீர்கள். அந்தவிதமாகத்தான் தேவன் அந்த படத்தை வரைந்து வைத்தார்.

123. நீங்கள் கவனிக்கிற முதலாவது காரியம் என்னவென்றால், ஒரு நரைத்த தலைமுடி உள்ளே வருகிறது. தாயாரே, அந்த அழகான கண்கள் கீழாக சுருங்கத் துவங்குகிறது. அவர்கள் இன்றிரவு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களே, அங்கே பாருங்கள்; அவர்கள் வயது சென்றவர்களாகவும், வலுக்குறைந்தவர்களாகவும், தலை

நரைத்தவர்களாகவும் இருக்கிறார்கள். கவலைப்பட வேண்டாம், அதுதான் மரணம். ஏறக்குறைய 25 வயதான பிறகு, மரணமானது உங்கள் மேல் வர ஆரம்பிக்கிறது. நீங்கள் பலவீனராகத் துவங்கி, உங்களுடைய இரத்த ஓட்டமானது கீழான நிலைக்கு போகத் துவங்குகிறது. நீங்கள் என்ன செய்தாலும் காரியமில்லை, நீங்கள் எவ்வளவு புசித்தாலும், நீங்கள் எவ்வளவு விஞ்ஞானப்பூர்வமான காரியத்தை செய்தாலும், அது பொருட்டல்ல, நீங்கள் சரியாக கீழே தான் போய்க் கொண்டிருக்கிறீர்கள்,

ஏனென்றால் தேவன் அவ்விதமாகக் கூறினார்.

124. இப்பொழுது. சாராளும் ஆபிரகாமும் அவர்களுக்கு 100 வயதாகும் வரைக்குமாக அவர்களும் அந்தவிதமாக கீழான நிலைக்குத் தான் வந்திருந்தார்கள். அடுத்த நாள் காலையில் ஆபிரகாம் தூக்கத்தை விட்டு விழித்தெழுந்து, "இதோ பார், அன்பே..." என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

சாராள் வாலிப பெண்ணாக இருந்த போது, அவள் ஒரு அழகான பெண்ணாக இருந்தாள் என்பது உங்களுக்குத் தெரியும்.

125. மேலும் அவன், “இதோ பார், அன்பே, என்னவென்று உனக்குத் தெரியுமா? உன்னுடைய தலைமயிர் மீண்டுமாக கறுப்பாக மாறிக் கொண்டிருக்கிறது. கடந்த இரவு முதற்கொண்டு உன்னுடைய முகத்தின் கீழிருந்து எல்லா தோல் சுருக்கங்களும் அகன்று (மறைந்து) போய்க் கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன்” என்றான்.

“நல்லது,” அவளும், “வயதானவரே, உம்முடைய தோள்களும் நேராகிக் கொண்டிருப்பதை நான் கவனிக்கிறேன்” என்று கூறினாள்.

126. ஓ, என்னே! ஒரு சில மணி நேரங்கள் கழித்து, அவன் ஒரு பக்கெட் தண்ணீர் அல்லது ஏதோவொன்றை எடுக்க வெளியே செல்கிறான், ஒருக்கால் அவன் திரும்பி வந்து, "சாராளே, நீ அழகானவளாய் காணப்படுகிறாய்!" என்றான்.

அவளும், "ஏன், ஆபிரகாமே, நீரும் நான் உம்மை விவாகம் செய்த போது இருந்ததைப் போன்று காணப்படுகிறீரே" என்றாள். அவர் அவர்களை பழைய நிலைக்கு மாற்றி விட்டார்.

"ஓ," நீங்கள், "சகோதரன் பிரன்ஹாமே, அது முட்டாள்தனம்" என்று கூறலாம்.

நல்லது, ஒரு நிமிடம் பொறுங்கள், இப்பொழுது, அப்படியே ஒரு நிமிடம், பாருங்கள்?

127. கவனியுங்கள். அவர்கள் அப்பொழுதிலிருந்து கேராருக்கு வழியெல்லாம் பிரயாணம் செய்து சென்றார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அதை உங்கள் வரைபடத்தில் அளந்து பாருங்கள்; அது ஏறக்குறைய 300 மைல்கள் தூரம். அது ஒரு வயதான பாட்டிக்கும் தாத்தாவுக்கும் ஒரு மிகப்பெரிய பிரயாணம்,

இல்லையா? உஷ்ணமான பாலைவனங்கள் வழியாக அவர்கள் கேராருக்குப் போனார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் அங்கு சென்று சேர்ந்த போது, அபிமெலேக்கு என்னும் பெயருடைய பெலிஸ்திய இராஜா ஒரு இனிய இருதயத்தை தேடிக் கொண்டிருந்தான். அந்த அழகான எல்லா பெலிஸ்திய வாலிப பெண்கள் சுற்றிலுமிருந்த போதிலும், ஒரு சிறு தொப்பியுடனும், சிறு வளைந்த தோள்களில் ஒரு கைத்தடியைப் பிடித்துக் கொண்டுமிருந்த இந்த வயதான பாட்டியை அவன் கண்ட போதா அவன், “நான்

இவளுக்காகத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவள் எனக்கு வேண்டும்" என்றான்.

128. அவன் சாராளோடு காதலில் விழுந்தான். அது வேதவாக்கியம் தானா? ஆமென்! என்ன சம்பவித்தது? அவள் மீண்டும் ஒரு அழகான வாலிப பெண்ணாக மாறினாள். ஆமென்!

கவனியுங்கள். நண்பர்களே, அது இதை நிரூபிக்கிறதே. தேவன் அவளுக்கு ஒரு குழந்தையை கொடுக்கப் போவதாய் இருந்து, அவளுக்கு 100 வயதாகியிருக்குமானால், அவர் செய்ய வேண்டிய முதலாவது

காரியம் என்னவென்றால், அந்த இருதயத்திற்கு புத்துயிர் அளிப்பது தான், அல்லது அவளால் அந்தக் குழந்தையைக் கொண்டிருக்க முடியாது. நான் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்பது வயது வந்தவர்களாகிய உங்களுக்குத் தெரியும். அவள் மிகவுமாக பெலவீனமாயிருந்தாள்.

129. இப்பொழுது, அவர் செய்ய வேண்டியதாயிருந்த மற்றொரு காரியம் என்னவென்றால், பாலுக்கான இரத்த நாளங்களை அவர் உருவாக்க வேண்டியதாயிருந்தது. அந்த நாட்களில் இந்த ஆரோக்கிய சுகாதார பாட்டில்கள் அவர்களிடம்

கிடையாது. அப்போது ஸ்திரீகள் புகைபிடிக்கவில்லை, அதுதான் இப்பொழுது அவர்கள் இந்த உடல் சார்ந்த தொல்லைகளைக் கொண்டிருப்பதற்கான காரணமாகும். அந்த தாய் அவள் வளர்க்க வேண்டிய விதத்தில் அவளுடைய குழந்தையை வளர்த்தாள். என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அங்கே அவர் இரத்த நாளங்களை சிருஷ்டிக்க வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் அவைகள் உலர்ந்து போயிருந்தன. அவளுடைய கற்பப்பையை கருத்தரிக்க வைக்க அவர் ஒரு அற்புதத்தை நடப்பிக்க வேண்டியதாய் இருந்தது,

ஏனென்றால் அது மரித்துப் போயிருந்தது. அது உண்மை தானா? (சபையோர், “ஆமென்” என்கின்றனர் - ஆசிரியர்.) தேவன் காரியங்களை பழுது பார்த்து சரிசெய்வதில்லை, அவர் அப்படியே ஒரு புத்தம் புதிய பெண்ணாக அவளை ஆக்கி விட்டார். ஆமென்! அல்லேலூயா! அவருடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக் கொள்ளும் ஆபிரகாமுடைய ஒவ்வொரு குமாரத்திக்கும், ஆபிரகாமுடைய ஒவ்வொரு குமாரனுக்கும் அவர் அதைத்தான் செய்யப் போகிறார். நிச்சயமாகவே அவர் அதைச் செய்வார். இது அதை நிரூபிக்கிறது.

130. சாராள் எந்தப் பிரச்சினையுமே இல்லாமல் அந்தக் குழந்தையைப் பெற்றாள் (அது உண்மை), அவனை வளர்க்கவும் செய்தாள். அவனுக்கு ஏறக்குறைய 45 வயது ஆவது வரைக்குமாக அவள் அநேக வருடங்கள் ஜீவித்தாள். சாராள் மரித்த பிறகு, இப்பொழுது, ஆபிரகாமைக் கவனியுங்கள், அவனுடைய சரீரம் பழைய நிலைக்கு மாறியிருந்தது என்பதை காண்பிக்கும்படியாக - அவன் வேறொரு பெண்ணை விவாகம் செய்து, அவனுக்கு குமாரத்திகளைத் தவிர ஒன்பது குமாரர்கள் இருந்தார்கள். மகிமை! அதுதான் நம்முடைய தேவன்.

அதைத் தான் அவர் செய்தார். ஏதோவொரு நாளில், இயேசு வரும் போது, அவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் அதையே செய்வார். ஒவ்வொரு தோல் சுருக்கமும், ஒவ்வொரு நரைத்த தலைமயிரும், வயதாகி வாடி வதங்கிப் போன ஒவ்வொரு கரமும், மற்ற யாவுமே மறைந்து போய், அவரோடு என்றென்றுமாய் வாழும்படியாக, ஏதோவொரு நாளில், தேவன் அதைத் திரும்பவுமாக அதனுடைய அழகில், அதனுடைய சிறப்பான நிலையில் அதைக் கொண்டு வருவார்.

131. ஓ, நான் அவரை நேசிக்கிறேன். நான் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையில் அவரை அறிந்துள்ளதற்காக நான் இன்றிரவு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மகிமையான நாட்களில் ஏதோ ஒன்றில், அவர் இயேசுவை அனுப்புவார். "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், (பின்பு) உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே என்றென்றுமாய் இருப்போம் (1 தெச. 4:16,17)." அவருடைய அழகிலும், ஆரோக்கியத்தின்

ஒளியிலும், வாலிபத்திலும் நாம் என்றென்றுமாக அவரோடு அரசாளுவோம், ஏனென்றால் நீங்கள் அவருடைய குமாரனின் மேல் விசுவாசம் கொண்டீர்கள், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார். ஆமென்.

---

(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)



*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in